**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் (''கூட்டுத்தாபனம்'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் 91 ஆம் பந்தியின் பிரகாரம் மீண்டெழும் அல்லது மீண்டெழாத அடிப்படையிலான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதியை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான தகவல்கள் கூட்டுத்தாபனத்தால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்குச் சொந்தமான விற்பனைக்காக பேணப்பட்ட மீண்டெழாத சொத்துக்கள் காணப்படவில்லை. மீண்டெழும் அடிப்படையிலான நிதிச் சொத்துக்கள் தொடர்பாக பூர்வாங்க அங்கீகாரம், பெறுமதியிடும் முறை மற்றும் அளவீடுகள் போன்ற விபரமான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கீட்டு நியமமொன்றால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் தவிர ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாது. எனினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,590,505 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் கணக்குகளின் செலவு மீதிகள் அத் திகதியிலுள்ளவாறான ரூபா 878,860,394 தொகையான வரவு மீதிகளிற்கெதிராகவும் ரூபா 2,703,133 தொகையான சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சார்பில் வழியிலுள்ள சரக்கு கணக்கின் செலவு மீதி அத் திகதியிலுள்ளவாறான ரூபா 253,016,979 வரவு மீதிக்கெதிராகவும் ரூபா 6,610,270 தொகையான செலுத்த வேண்டிய முகவர் தரகுக் கணக்கின் வரவு மீதிகள் அத் திகதியிலுள்ளவாறான ரூபா 60,011,028 செலவு மீதிகளிற்கெதிராகவும் ஈடுசெய்யப்பட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. மேலும் வியாபாரக் கடன்பட்டோர் கணக்கு மற்றும் வழியிலுள்ள சரக்கு | ஒரே கணக்குகளில் மாத்திரம் காணப்பட்ட வரவு மற்றும் செலவு மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டிருந்தன. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கு என்பவற்றின் செலவு மீதிகள் மற்றும் முகவர் தரகுக் கணக்கின் வரவு மீதி என்பவற்றை கண்டறிந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 30 மற்றும் 31 ஆம் பந்திகளின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திறனாக காணப்படாத புதிய இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தை (எஸ்எல்எவ்ஆர்எஸ்) நிறுவனம் பிரயோகித்திருக்காத போது நிறுவனம் அவ் விடயத்தையும் ஆரம்ப பிரயோக காலப்பகுதியின் போது நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான புதிய எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரயோகம் கொண்டிருக்கும் சாத்தியமான தாக்கத்தை மதிப்பீடு செய்வது தொடர்பாக தெரிந்த அல்லது நியாயமாக மதிப்பிடக்கூடிய தகவல்களையும் வெளிப்படுத்த வேண்டும். எனினும் வழங்கப்பட்டிருந்த போதிலும் தற்போதும் செயற்திறனாக இல்லாத புதிய அல்லது திருத்திய நியமங்களிற்கான (உதாரணமாக: எஸ்எல்ஆர்எவ்எஸ் 16 குத்தகை வாடகை) கணக்கீட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபனத்தால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இரத்மலானை களஞ்சியங்கள் அமைந்துள்ள குத்தகைக்கு பெறப்பட்ட காணி இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க இது கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி மற்றும் வழங்கப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களை திருத்துவதற்கான அதிகாரம் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை வழங்குதல் மற்றும் திருத்துவதற்கான அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களினது ஐந்தொகையில் இவ் அதிகாரம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கான அதிகாரம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கும் திகதி மற்றும் திருத்துவதற்கான அதிகாரம் என்பன ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 81(எ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு காலப்பகுதிக்குமான நிதி நிலைமைக் கூற்றில் வரிப் பொறுப்புக்களிற்குரிய பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி செலவுகள் (tax credits) தொடர்பான தற்காலிக வேறுபாடுகளின் ஒவ்வொரு வகைக்கும் உரிய விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றால் சமர்ப்பிக்கப்பட்ட பொழிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் விபரமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடியதாக உள்ள போது ஆரம்பிக்கப்பட வேண்டும். எனினும் பெறுமானத்தேய்விற்காக கூட்டுத்தாபனத்தால் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை உரிய நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காததுடன் பூர்த்தி செய்யப்பட்டும் இருக்கவில்லை. அத்துடன் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கும் காலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்ளும் போது சொத்துக்களின் ஆயுட்காலத்தை கணிப்பீடு செய்வதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு தேவையான இடங்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.<br><br>சொத்துக்களின் பெறுமானத்தேய்விற்கான அடிப்படை கணக்கீட்டுக் கொள்கைகள் 4.1.3 இன் கீழ் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அச் சொத்துக்களின் கொள்வனவு ஆரம்பிக்கும் போது ஆரம்பிக்கப்படுகின்றது. அவ்வாறு பெறுமானத்தேய்விடப்பட்டிருக்காத சொத்துக்கள் காணப்பட்டன. ஆகையால் கணக்கீட்டுக் கொள்கையானது கணக்கீட்டு நியமம் 16 உடன் இணங்கியிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கையளிக்கப்பட்ட வரவுத் தாள்களின் ரூபா 4,080,000 தொகையான மருந்துகளின் இருப்புக் கிரயம் வழியிலுள்ள சரக்கு கணக்கிலிருந்து செலுத்த வேண்டிய வங்கி விலைப்பட்டியல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | 2 விலைப்பட்டியல்களில் ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இது வழியிலுள்ள சரக்கு கணக்கிலிருந்து செலுத்த வேண்டிய விலைப்பட்டியல் கணக்கிற்கு மாற்றப்பட முடியாதிருந்தது. | அத் தவறை சீர்செய்த பின்னர் எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் கணக்குகளில் ரூபா 222,180 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது இத் தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் போது மீள முதலீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூபா 300,377 ஆல் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது இத் தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதிசெய்யும் மூலப்பொருள் இருப்பு மீதி ரூபா 299,642 ஆல் கணக்குகளில் குறைத்தக் காட்டப்பட்டிருந்தன. | பெறுமதி சேர் வரி கணிப்பீட்டின் போது இத் தவறு ஏற்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டிற்காக பெறப்பட்ட ரூபா 531,025 தொகையான கட்டிட வாடகை வருமானம் விற்பனை வருமானமாக கருதப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | இரத்தினபுரி ஒசுசல விற்பனை நிலையக் கட்டிடத்தின் ஒரு பகுதியின் வாடகை வருமானம் ஒசுசலவின் வருமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகின்றதுடன் கட்டிடத்தின் மொத்தப் பெறுமானத்தேய்வு ஒசுசலவின் செலவினமாக கருதப்படுகின்றதுடன் கட்டிடத்தின் பெறுமானத்தேய்வை தனியாக இனங்காண்பது சிக்கலானதாக உள்ளது. | -மேற்படி- |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | உப ஏடுகளின் பிரகாரம் தொகை | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெறவேண்டிய கடன்கள் | 16,999 | 16,787 | 212 | திறைசேரி மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா மில்லியன் | | | |
| (அ) 176 வியாபார கடன்கொடுத்தோர் மீதிகள் | 1,915 | மீதி உறுதிப்படுத்தல்கள் | வியாபார கடன்கொடுத்தோர் மீதி தீர்ப்பனவு செய்யப்படாத சமயத்தில் ரூபா 834 மாத்திரமே காணப்பட்டது. | மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது; | | கணிப்பீட்டிற்கான அடிப்படை | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன்பட்டோரிற்கு உரிய ஐயக்கடன் ஏற்பாட்டிற்கான பட்டியல்கள் மற்றும் கணிப்பீட்டு அடிப்படைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| – கூட்டுத்தாபனத்தின் கடன்பட்டோரிற்கான ஐயக்கடன் ஏற்பாடு | 55 | | | |
| – மருத்துவ வழங்கல் பிரிவிற்கான ஐயக்கடன் ஏற்பாடு | 2,419 | | | |

### 1.5.5 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 16,998,983,680 மீதியில் ரூபா 211,591,893 தொகை 9 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரையான காலத்திற்கு மேலாக காணப்பட்டன. | திறைசேரி மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | முறையான அங்கீகாரம் ஒன்றுடன் பழைய கடன்பட்டோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் வியாபாரக் கடன்பட்டோரிற்கான அறவீட்டுக் கொள்கையானது விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்கள் தொடக்கம் 45 நாட்கள் வரையான காலப்பகுதியினுள் ஆறவீடு செய்தல் ஆகும். எனினும் 2018 திசெம்பர் 31 இல் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியில் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள மீதி ரூபா 210,346,536 ஆக காணப்பட்டது. இலங்கை பாராளுமன்றத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய மேற்படி | உடன்படிக்கைகளின் பிரகாரமும் கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் பிரகாரமும் உரிய காலப்பகுதியினுள் கடன்களை அறவீடு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான ரூபா 878,860,394 மீதியில் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக அரசாங்க மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 12,408,417 தொகையும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இலங்கை பாராளுமன்றத்திலிருந்து ரூபா 14,621,371 தொகையும் கூட்டுத்தாபனத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 3,138,783 தெகையை அறவீடு செய்வதற்கு மாத்திரம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 14,621,371 மீதியை அறவீடு செய்வதற்கு உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திருப்தியடையக்கூடிய பதிலொன்று பெறப்பட்டிருக்கவில்லை. அத் தொகை முழுவதற்கும் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 12,408,417 ஆன நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | வினைத்திறனாக காணப்பட வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய காப்புறுதி இழப்பீடு ரூபா 2,279,937 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 365,556 தொகை 2 ஆண்டுகள் தொடக்கம் 9 ஆண்டுகள் வரையான காலமாக கூட்டுத்தாபனத்தால் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 2,279,937 காப்புறுதி இழப்பீட்டில் ரூபா 198,671 தொகை 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. அழிவடைந்த சரக்குகளிற்கான காப்புறுதி இழப்பீடாக பெறவேண்டிய ரூபா 1,607,828 தொகை இதில் உள்ளடங்கியுள்ளது. 2 ஆண்டுகள் தொடக்கம் 9 ஆண்டுகள் வரையான காலமாக ரூபா 365,556 தொகையான இழப்பீட்டுக் கோரிக்கைக்குரிய அனைத்து ஆவணங்களும் காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அவ் இழப்பீட்டுக் கோரிக்கை பெறப்பட வேண்டியிருந்தது. | காப்புறுதி இழப்பீட்டை அறவீடு செய்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொள்கலன் வைப்புக் கணக்கு மீதி ரூபா 11,848,455 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 6,219,806 தொகை 2 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் வரையான காலமாக கூட்டுத்தாபனத்தால் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கொள்கலன் வைப்புக்களின் பெறுமதி 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 9,479,455 வரை குறைவடைந்திருந்தது. அதில் 2 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 5,764,322 தொகை பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது திறைசேரிக்கு | கொள்கலன் வைப்புக்களை அறவீடு செய்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | ஒப்படைக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது. பெறவேண்டிய மிகுதி தொகையில் ரூபா 2,704,000 தொகை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவீடு செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளதுடன் வழங்குநர்களிடமிருந்து ரூபா 1,011,133 மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |

### 1.5.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வங்கி விலைப்பட்டியல் கணக்கு மீதி ரூபா 6,995,499,499 ஆக காணப்பட்டது. இம் மீதியானது 4 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட ரூபா 1,195,759 தொகை மற்றும் 3 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட ரூபா 27,673,516 தொகை மற்றும் 2 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட ரூபா 76,784,033 தொகை என்பவற்றை கொண்டிருந்தது. அம் மீதிகள் வழங்குநர்களிற்கு 100 சதவீதம் செலுத்தப்படாத நாணயக் கடிதத்தின் பெறுமதி மற்றும் நிறுத்தி வைத்தல் பணம் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தன. | பல்வேறு காரணங்களினால் நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவுக்குரிய மீதிகள் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன. 3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் அல்லது வருமானமொன்றாக இனங்காணப்பட வேண்டும் என்பது கணக்கீட்டுக் கொள்கையாக காணப்படுகின்றது. எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய அல்லது தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய மீதிகளை மிகுதியாகவுள்ள மீதி பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | கண்டறிந்து தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,237,753 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 96,600 தொகையான முற்பணங்கள் 2019 மே 07 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவ் வழங்குநர்கள் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பில் காணப்படாததன் காரணமாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் ரூபா 1,237,753 தொகையை பதிவழிப்பதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 96,600 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தன. | போதியளவான பிணைகள் மீது முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியதுடன் வேலை பூர்த்தியடைந்ததும் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 | ❖ முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது காலாவதியாகியிருந்த மருத்துவ வழங்கல் இருப்பின் மொத்தக் கிரயம் ரூபா 123,610,942 ஆக காணப்பட்டது. நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பான தரப்பினர்களை தீர்மானித்து நட்டங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது காலாவதியாகியிருந்த ரூபா 107 மில்லியன் தொகையான மருத்துகளின் இருப்பு பெறுமதியில் ரூபா 20.7 மில்லியன் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சியும் எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | ❖ கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 9 வாகனங்களிற்கு மீளாய்வாண்டின் போது 12 விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன. அதில் 06 விபத்துக்களின் மொத்த நட்டமும் 05 விபத்துக்களின் நட்டத்தின் பகுதியொன்றும் காப்புறுதிக் கம்பனியால் மிளளிக்கப்பட்டிருந்தன. எனினும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பூர்வாங்க விசாரணைகள் மற்றும் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் உரிய தரப்பினர்களிற்கு அத்தகைய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 விபத்துக்களிற்குரிய மொத்த தொகையும் 05 விபத்துக்களிற்குரிய நட்டத்தின் பகுதியொன்றும் காப்புறுதிக் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தன. மிகுதியை அறவீடு செய்வதற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | - மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 571(2) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,512,448 தொகையான தவணை கடந்த வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வைப்புக்கள் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் மற்றும் வங்கிப் பிணைகளிற்கான வைப்புக்கள் வழங்குநர்களினால் வேண்டுகோள் மேற்கொள்ளப்படும் போது மீளளிக்கப்பட வேண்டியதுடன் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வைப்புக்கள் வருமானமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் நடவடிக் கைகள் எடுக்கப் பட வேண்டு ம். |
| (iii) | நிதிப் பிரமாணம் 757(2)(அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய பொருள் மெய்மையாய்வுகளின் அறிக்கைகள் 2019 மே 10 வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமாப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து அரச ஒசுசல மற்றும் இரத்மலானை களஞ்சியத் தொகுதி என்பவற்றின் இருப்பு மெய்மையாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்தின் இருப்பு மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ் அறிக்கைகள் தாமதமின்றி அடுத்த ஆண்டில் சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி- |
| (iv) | நிதிப் பிரமாணம் 770(2) | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 1,718,850 கிரயமான 54 பொருளிருப்பு உருப்படிகள் சேதமடைந்திருந்தன. பொருள் கணக்கெடுப்புச் சபையை நியமனம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்களை இனங்கண்டு அழிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட பொருட்களை அழிப்பது அல்லது விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | - மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஓடும் நிலையில் காணப்படாததும் அகற்றப்பட வேண்டியதுமான கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 4 வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 4 வாகனங்களிற்கான மதிப்பீட்டு அறிக்கைகள் சுயாதீனமான நிறுவனமொன்றிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அது 3 வாகனங்களின் மேலதிக நடவடிக்கைகளிற்காக திணைக்கள பெறுகை குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 953,149,764 இலாபமொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,089,431,741 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 136,281,977 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிதிச் செலவினம் 89 சதவீதத்தால் அதிகரித்தமையே இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக உள்ளது.

### 2.2 பிரதான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான வங்கி மேலதிகப்பற்றிற்கான வட்டிச் செலவினம் முறையே ரூபா 35,199,403 மற்றும் ரூபா 67,405,970 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அச் செலவினம் மீளாய்வாண்டின் போது 91 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவிற்கான வழங்கல்களின் அளவு அல்லது எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் பணத்தைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக அதிக வங்கி மேலதிகப்பற்றுக்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின தேறியலாப விகிதம் 0.4 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் கடன்பட்டோர் புரள்வு விகிதம் 1.1 தடவைகளால் குறைவடைந்திருந்தது. அத்துடன் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் 43 நாட்களால் அதிகரித்திருந்தது. இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தரமற்ற மருந்துகள் மற்றும் சேதமடைந்த மருந்துகள் வழங்கப்பட்டமை மற்றும் மருந்துகள் குறைவாக வழங்கப்பட்டமை தொடர்பாக ஏற்பட்ட கிரயம், நிர்வாகக் | வரவுத் தாள்களை வழங்கியதன் பின்னர் வழங்குநர்களிடமிருந்து அறவீடு செய்யும் செயற்பாடு இலகுவானதொன்றல்ல. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 811,195,059 தொகையில் வரவுத் | வழங்குநர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு வினைத்திறனான முறை பின்பற்றப்பட வேண்டும். |

கட்டணங்கள் மற்றும் இருப்புக்களை அழிப்பதற்கு ஏற்பட்ட செலவினங்களை அறவீடு செய்வதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குநர்களிற்கு ரூபா 1,754,661,431 பெறுமதியான வரவுத் தாள்கள் (debit notes) வழங்கப்பட்டிருந்தன. எனினும் அத் தொகையில் ரூபா 811,195,059 தொகை கூட்டுத்தாபனத்தால் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்படி தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 47,106,121 தொகை கறுப்புப் பட்டியலில் இடப்பட்ட வழங்குநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் ரூபா 283,811,421 தொகை கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தவறியிருந்த வழங்குநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆகையால் அவற்றினை அறவீடு செய்தல் நிச்சயமற்றிருந்தது.

தாள் பெறுமதிகளை தவணைகளாகவேனும் அறவீடு செய்வதில் ஈடுபட்டு 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 44,760,118 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் கறுப்பு பட்டிடலில் இடப்பட்ட வழங்குநர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன.

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் போது தரமற்ற மற்றும் காலாவதியான மருந்துகளின் மொத்தக் கிரயம் முறையே ரூபா 23,561,218 ம்றும் ரூபா 80,834,686 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான தரமற்ற மற்றும் காலாவதியான மருந்துகளின் கிரயம் முறையே ரூபா 13,979,105 மற்றும் ரூபா 42,776,256 ஆக காணப்பட்டன. | கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளில் தரமற்ற மற்றும் காலாவதியான மருந்துகளின் பெறுமதி ரூபா 165.9 மில்லியனாக காணப்பட்டது. அதில் ரூபா 52.5 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தரமற்ற மருந்துகளின் பெறுமதி வழங்குநர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டும். மருந்துகள் காலாவதியானதற்கான காரணங்களை கண்டறிவதற்கும் மாற்றுவழிகளை பிரயோகிப்பதற்கும் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட 40 ஒசுசலக்களில் 24 ஒசுசலக்களில் ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 45,139,259 ஆகும். அவ் மொத்த நட்டத்தில் 32 சதவீதம் அவிசாவளை, மினுவாங்கொடை, தியதலாவ, தங்காலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் இரத்மலானையில் அமைந்துள்ள 07 ஒசுசலக்களில் ஏற்பட்டிருந்தது. இவ் 7 ஒசுசலக்களும் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தன. | நட்டமடைந்த ஒசுசலக்களின் விற்பனைகளில் அதிகரிப்பொன்று காணப்படுகின்றதுடன் நட்டம் குறைவடைந்துள்ளது. நான்கு புதிய ஒசுசலக்கள் 2018 ஆம் ஆண்டின் போது வலையமைப்பிற்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. புதிய ஒசுசலக்களிலிருந்து ஒரே நேரத்தில் இலாபத்தை எதிர்பார்க்க முடியாது. மருந்துகளின் விலையை ஒரேநேரத்தில் கட்டுப்படுத்த வேண்டியிருப்பதுடன் ஒசுசலக்களின் கட்டிடங்களிற்கான மாதாந்த வாடகையாக பெரிய தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது. அவை அந் நிலைமைக்கான மேலதிக காரணங்களாக உள்ளதுடன் இது தொடர்பாக பல்வேறு தந்திரோபாயங்களை பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒசுசலக்களின் நட்டங்களை இழிவுபடுத்துவதற்கும் இலாபங்களை உழைப்பதற்கும் தேவையான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக சுகாதார நிறுவனத்தின் 143 நிறைவேற்றுக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கான சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நியமனத்தை கொண்டாடுவதற்காக நடாத்தப்பட்ட விழா ஒன்றிற்காக மீளாய்வாண்டின் போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 1,000,000 தொகை அனுப்பப்பட்டிருந்தது. | உலகம் முழுவதிலும் உள்ள சுகாதார துறையில் இலங்கைக்கு விசேட இடமொன்றை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சியொன்றாக இது உள்ளதுடன் பல்வேறு உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தரப்பினர்கள் இவ் விழாவில் பங்குபற்றியிருந்தனர். இவ் அனுசரணை ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை மேம்படுத்தல் நன்மைகள் பெறப்பட்டிருந்தன. | நிதிகள் கூட்டுத்தாபன நோக்கங்களிலிருந்து விலகி வழமைக்கு மாறான நோக்கங்களிற்காக செலவிடப்படக் கூடாது. |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கல்களிற்காக பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகைக் கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்ட போதிலும் பெறுகை தன்மையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாதிருந்தன. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சந்தை விலை முறையை (shopping method) பின்பற்றி ரூபா 1,530,229 தொகை செலவிட்டு அலுவலக உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களிற்கு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை, கேள்வி கோரலிற்கான அனைத்து ஆவணங்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை, முறையான அங்கீகாரங்களிற்காக போதியளவு காலப்பகுதியை அனுமதிப்பதற்கேற்றவாறு கேள்விகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டுள்ளதுடன் அத் தவறுகள் எதிர்கால பெறுகையில் சீர்செய்யப்படும். | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) தாமதமான கட்டளைகள் தொடர்பாக தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கான நிபந்தனைகள் விசேடமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 124 நாட்கள் தாமதக் காலப்பகுதிக்கான தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட முடியாதிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது 720 vials of 100mg in 10ml of Rituximab Injection மற்றும் 920 vials of 500mg in 50ml என்பன வரையறுக்கப்பட்ட போட்டிக் கேள்வி செயன்முறையை பின்பற்றி சர்வதேச சந்தையிலிருந்து ரூபா 57,675,670 தொகை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | கேள்விதாரர்கள் முன்னைய வழங்குநர்களாக காணப்படாததன் காரணமாக விலைமனுக்களை நிராகரிக்கும் அதிகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் வழங்கப்பட்டிருக்காத போதிலும் அக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு குறைந்த விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் தேவைப்பாடுகளிலிருந்து விலகுவதற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் தொடாபாக ஒழுக்காற்று அதிகாரியால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆகக் குறைந்த விலைமனுதாரர்களிற்கு 50 சதவீதப் படி கட்டளையை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்காக பெறுகைக் குமுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மூன்றாவது விலைமனுதாரரும் முன்னைய வழங்குநராக இருக்கவில்லை. | -மேற்படி- | -மேறபடி- |

| | | | |
|---|---|---|---|
| | (iii) குறைந்த விலைமனுதாரரிற்கு ஒப்பந்தம் வழங்கப்படாததன் காரணமாக கூட்டுத்தாபனத்தால் ரூபா 5,421,827 மேலதிகக் கிரயமொன்று செலவிடப்பட வேண்டியிருந்தது. | இதனை மேலதிகக் கிரயமொன்றாக காட்டுதல் சரியானதல்ல. ஏனெனில் பரிந்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த விலைக்கே கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஈ) | 540 vials of 100mg in 10ml of Rituximab Injection மற்றும் 690 vials of 500 mg in 50 ml என்பன உள்ளூர் சந்தையிலிருந்து ரூபா 67,768,500 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றின் மீது ஏற்பட்ட மேலதிகக் கிரயம் ரூபா 21,606,922 ஆக காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) வழங்குநரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவசர பெறுகையொன்றாக காணப்பட்டதன் காரணமாக செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் தேவைப்பாடுகளிலிருந்து விலகுவதற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் தொடாபாக ஒழுக்காற்று அதிகாரியால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) இரண்டு மதியுரையாளர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் ஒரு மதியுரையாளர் மாத்திரமே நியமனம் செய்யப்பட்டிருந்தார். | | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கேள்விதாரர்கள் முன்னைய வழங்குநர்களாக காணப்படாததன் காரணமாக விலைமனுக்களை நிராகரிக்கும் அதிகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் வழங்கப்பட்டிருக்காத போதிலும் அக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு மிகக் குறைந்த விலைமனு மற்றும் இரண்டாவது மிகக் குறைந்த விலைமனு என்பன நிராகரிக்கப்பட்டிருந்தன. | தொழில்நுட்ப மதிப்பீட்டை மேற்கொள்ளுகின்ற மதியுரையாளரின் அபிப்பிராயம் அல்லது பரிந்துரைக்கு எதிராக செயற்படுவது நன்றல்ல. விசேடமாக அவசர பெறுகைகளின் போது அவர்களால் பரிந்துரையொன்றை வழங்குவதற்கு முடியாதுள்ளதென அறிவித்திருந்த மதியுரையாளர்கள் விடயத்தில் புறக்கணிப்பதை விட வேறு மாற்றுவழி எதுவும் காணப்படுவதில்லை. | -மேற்படி- |
| (iv) | நான்காவது ஆகக் குறைந்த விலைமனுவை சமர்ப்பித்திருந்த கேள்விதாரரிற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பட்ட மேலதிக கிரயம் ரூபா 44,545,500 ஆக இருந்தது. | பரிந்துரைக்கப்பட்ட வழங்குநரிற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. ஆகையால் பரிந்துரைக்கப்படாத வழங்குநரின் விலையுடன் ஒப்பீடு செய்து மேலதிக கிரயத்தை கணிப்பீடு செய்வது சரியானதல்ல. | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் போது வரையறுக்கப்பட்ட சர்வதேச போட்டிக் கேள்வி செயன்முறையின் கீழ் ரூபா 10,904,714 தொகை செலவிடப்பட்டு 1,102,600 அலகுகள் Blood Glucose Testing Strips with Blood Lancet மற்றும் 974 அலகுகள் Blood Glucose Testing Meters என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | பெறுகைக் கால அட்டவணையிலிருந்து விலகி தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் பெறுகை நடவடிக்கைகளிற்காக முறையே மேலதிகமாக 14 வாரங்கள் மற்றும் 12 வாரங்கள் செலவிடப்பட்டு 6 மாத கால தாமதத்துடன் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்தது. | மருத்துவ வழங்கல் பிரிவு 4 மாதங்களைப் போல் குறுகிய காலப்பகுதியொன்றை வழங்கியிருந்தமை நடைமுறையில் காணப்படாததுடன் முதலாவது இருப்பு 9½ மாதங்களிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அத் தாமதம் காரணமாக நேரடி ஒப்பந்த முறையை பின்பற்றி பிரதான கட்டளை கொள்வனவு செய்யப்பட்டிருந்த வழங்குநரிடமிருந்து ரூபா 47,259,233 தொகை செலவிடப்பட்டு 2,878,150 அலகுகள் Blood Glucose Testing Strips with Blood Lancet கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மருத்துவ வழங்கல் பிரிவு எழுத்து மூலம் அறிவித்திருந்த வழங்குநரிடமிருந்து நேரடிக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | இரண்டாவது பெறுகை தொடர்பான பெறுகைக் குழுவின் பரிந்துரை 2018 யூலை 17 இல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அத் தினத்திற்கு முதல் நாளான 2018 யூலை 16 இல் கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. | அவசர தேவைப்பாட்டின் மீது பெறுகைக் குழுவின் மேவுகை அங்கீகாரத்திற்கு உட்பட்டு கட்டளை வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (iv) | 2018 ஆகஸ்ட் 08 இல் இன்னொரு 1,439,075 அலகுகள் மூலம் இரண்டாவது கட்டளையை அதிகரித்து திணைக்கள பெறுகைக் குழு அங்கீகரித்திருந்தது. எனினும் இது தொடர்பான பெறுகைக் கட்டளை 2 நாட்களிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்ததுடன் பொருட்கள் 2018 ஆகஸ்ட் 07 வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | | -மேற்படி- |
| (v) | பிரதான கட்டளையிலிருந்து அலகொன்று ரூபா 9.89 வீதம் Blood Glucose Testing Strips with Blood Lancet கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நேரடி ஒப்பந்த முறையின் கீழ் அலகொன்று ரூபா 16.42 வீதம் இரண்டாவது கட்டளையிலிருந்து 4,317,225 அலகுகள் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தன. ஆகையால் ரூபா 28,191,479 நட்டம் ஏற்பட்டிருந்தது. | மேலதிகக் கிரயம் தொடர்பாக குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் இணங்கப்பட்டுள்ளது. பிரதான வழங்கலின் தாமதம் காரணமாக அவ் மேலதிகக் கிரயம் செலவிடப்பட வேண்டியிருப்பதால் பிரதான வழங்குநரிடமிருந்து அறவீடு செய்வதற்கான முறைமையொன்று காணப்படுகின்றது. | பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | வழங்குநரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறியொன்று பெறப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவசர கொள்வனவொன்றாக காணப்பட்டதால் கேள்வி பிணைமுறி அல்லது செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | Surgical equipment item Sterile Single Use Plastic Syringes size 50ml இல் 240,000 அலகுகள் ரூபா 10,045,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இணங்கப்பட்டவாறு அடையாளப் பெயரிடல் (labeling) மேற்கொள்ளப்படாததன் காரணமாக அவ் உபகரணத்தின் 240,000 அலகுகள் அனைத்தும் மருத்துவ வழங்கல் பிரிவால் நிராகரிக்கப்பட்டிருந்தன. உபகரண இருப்பை வைத்திருப்பதற்காகவும் கொள்கலன் தாமதக் கட்டணங்களிற்காகவும் ரூபா 1,597,563 மேலதிகக் கிரயம் செலவிடப்பட வேண்டியிருந்தது. அதில் ரூபா 712,759 தொகை மாத்திரம் வழங்குநரிடமிருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபன ஊழியர்களின் பொறுப்புக்கள் சார்பில் கூட்டுத்தாபன பதவியணியினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 884,804 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலதிகக் கிரயம் தொடர்பில் கூட்டுத்தாபன பதவியணியினரிற்கு பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டுமா என்பதை ஆராய்ந்தறிந்த பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் பதவியணியினரிடமிருந்து அவர்களின் பொறுப்புக்கள் சார்பில் நிதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (எ) | நோயாளியின் பெயரில் மருந்துகளை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பங்களின் போது மருத்துவ வழங்கல் பிரிவால் பிரதான வழங்கல்கள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக தாமதமாகின்றன. மருந்துகள் உள்ளடங்கலான மருத்துவ வழங்கல்கள் உள்ளூர் சந்தைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | கொள்வனவு நடைமுறைகள் மற்றும் முறைகள் குறித்துரைக்கப்பட்டிருக்காததுடன் எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் அல்லது வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக பின்பற்றப்பட்டிருந்த நடைமுறைகள் பிராந்திய கொள்வனவுக்குரிய பெறுகை தொடர்பாக பின்பற்றப்பட்டிருந்தன. | அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்கள் தொடர்பாக பணத்தை பெற்ற பின்னர் வழங்குநர்களிற்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபைத் தீர்மானத்தை குறிப்பிட்டு கேள்வி ஆவணங்களில் நிபந்தனையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ வழங்கல்களிற்கு திறைசேரியிடமிருந்து நேரடியாக நிதிகள் பெறப்பட்டிருந்ததுடன் அப் பணம் வழங்குநர்களிற்கு செலுத்தப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (iii) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 அம் வழிகாட்டலின் நிதி எல்லைகளை விஞ்சி பெறுகைகள் வழங்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (iv) | விலைமனுக்களுடன் மாதிரிகளை சமர்ப்பிக்குமாறு கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத் தேவைப்பாடு மதிப்பீட்டின் போது கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விலைமனுவுடன் மாதிரிகளை சமர்ப்பித்தல் கேள்விதாரரின் பொறுப்பாக உள்ளது. | -மேற்படி- |
| (v) | வழங்குநர்களுடன் ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். | அவசர கொள்வனவுகளின் போது உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கான காலம் காணப்படாததுடன் கட்டளை வழங்கப்பட்டதும் உடனேயே விநியோகம் மெற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதால் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதில்லை. | -மேற்படி- |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு 7 இல் அரச ஒசுசலவிற்காக புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ரூபா 106,305,300 தொகையான ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பூர்த்திசெய்யப்பட்டிருந்த மேலதிக வேலைக்காக செலுத்தப்பட்ட ரூபா 6,824,841 தொகை 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஒப்பந்ததாரரிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 88,926,577 கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த முரண்கள் தொடர்பாக பெறுகை கைநூலின் 8.13.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் புதிதாக இனங்காணப்பட்ட வேலைக்காக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.5.1 ஆம் வழிகாட்டலின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் புதிய ஒப்பந்த செயன்முறையொன்றின் ஊடாக அல்லது நேரடி ஒப்பந்த முறையை பின்பற்றி புதிய ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்கும் அமைச்சுப் பெறுகைக் குழுவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்கி கட்டிடத்தின் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | முறையான புலனாய்வொன்றின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2019 மே 10 வரையிலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அப்போதிலிருந்து 4 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | முறையான புலனாய்வொன்றின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | செயலாற்றல் பிணைமுறி 2016 பெப்ரவரி 24 இல் உள்ளவாறு காலாவதியாகியிருந்த போதிலும் செல்லுபடியாகும் காலப்பகுதி 2019 மார்ச் 18 வரையிலும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | குறிப்புரைகளுடன் இணங்கியிருக்காததும் தரப் பரீட்சிப்பு சான்றிதழ்கள் காணப்படாததுமான ரூபா 4,010,742 கிரயமான மின் தூக்கியொன்று நிறுவப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (v) | நிறுவப்பட்டிருந்த 24 வளிப் பதனாக்கிகளிற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 5,732,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியாகியிருந்த வரைக்கும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (vi) | 7 மின்சார விநியோக சபைகளை (மின்நிலைமாற்றிகள்) நிறுவுதல் தொடர்பான நடவடிக்கைகள் 2019 மார்ச் 18 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் இது தொடர்பில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 284,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | ஒப்பந்தப் பெறுமதி ரூபா 49,355,000 ஆகவுள்ள நிறுவன வளத் திட்டத்தை (Enterprise Resources Plan) கட்டியெழுப்புவதற்காக 2016 திசெம்பர் 19 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதிலிருந்து 61 வாரங்களினுள் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இது 2019 மார்ச் 25 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் தாமதமான காலப்பகுதி 55 வாரங்களாக காணப்பட்டது. ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவு பிணைமுறியொன்றை பெற்றுக்கொள்ளாமல் 2018 மார்ச் 12 இல் முற்பணமாக ரூபா 4,935,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | முறையான புலனாய்வொன்றின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டமை தொடர்பாக 1971 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 14,976/8 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட நுண்ணிய இரசாயனப் பொருளின் உற்பத்திக்கான தொழிலை உருவாக்குதல் மற்றும் அவற்றிற்கு அனுசரணையாக இருப்பதும், மருந்து விற்பனைகள் தொடர்பாக நாட்டினுள்ளும் வெளிநாடுகளிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இயலுமானவாறு 2016 – 2018 ஆம் ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் முக்கிய நோக்கங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றல் சுட்டிகள் பிரத்தியேகமாகவும் போதுமானதாகவும் அளவிடப்படக் கூடிய மட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 6 செயற்பாடுகளின் அடைதல் செயன்முன்னேற்றம் பிரத்தியேகமாக மதிப்பிடப்பட முடியாதிருந்தன. | எதிர்காலத்தில் நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | செயலாற்றல் சுட்டிகள் பிரத்தியேகமாகவும் போதுமானதாகவும் அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளின் செயன்முன்னேற்றத்தை அளவிடக்கூடியவாறு குறிப்பிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2016 – 2018 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்ததுமான ஆறு செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவன வளத் திட்டம் மற்றும் வெளித் தரப்பினர்களுடனான அதன் ஒருங்கிணைப்பு, வணிகத்தை தொடரும் திட்டத்தை முன்னேற்றுதல், ஆட்சேர்ப்புத் திட்டத்தை மீளாய்வு செய்தல், முகாமைத்துவ பதவிகளிற்கான வெற்றியளித்தல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் பதவியுயர்வுகளை தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் போன்ற 2015 ஆம் ஆண்டிலிருந்து செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் கூட்டுத்தாபனத்தால் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. நிறுவன வளத் திட்டம் மற்றும் வெளித் தரப்பினர்களுடனான அதன் ஒருங்கிணைப்பை உள்ளடக்கி அனைத்து செயற்திட்டங்களையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டம் முறையா தயாரிக்கப்பட வேண்டும் |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரல் தொடர்பாக கூட்டுத்தாபனம் அறிந்திருக்காததன் காரணமாக அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்ளுதல் மற்றும் அவ்வாறு அடைந்துகொள்வதனை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரல் தொடர்பாக முறையாக அறிந்திருக்கவில்லை. அதற்கிணங்க தற்போது வரை இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் விடயம் அறிந்துகொள்ளப்பட்ட பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரல் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |